بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (*அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 19/05/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக்* பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றங்கள் ஆகியவற்றை பிரதிபலிக்கக் கூடிய ஈமானுக்கு வலுவூட்டும் சில சம்பவங்கள்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வுடைய அருள் குறித்தும், ஜமாஅத் அதிகரித்துக் கொண்டே செல்வது குறித்தும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:

“இந்த அளவு பொய்ப்படுத்தப்பட்ட பிறகும், நிராகரிக்கப்பட்ட பிறகும் கூட, மேலும், இரவு பகலாக நம்முடைய எதிரிகள் கடும் முயற்சியை மேற்கொண்ட பிறகும் கூட இந்த ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்வதும் அல்லாஹ்வுடைய மிகப்பெரும் அற்புதமாகும்.

இதில் உள்ள நுட்பம் என்னவென்று அறிவீர்களா? இதில் உள்ள நுட்பம் என்னவென்றால், அல்லாஹ் யாரை அனுப்புகிறானோ - எவர் உண்மையிலேயே இறைவன் சார்பாக இருக்கின்றாரோ - அவர் நாளுக்கு நாள் முன்னேறுகின்றார். அவருடைய இயக்கம் நாளுக்கு நாள் பொலிவடைந்து கொண்டே செல்கின்றது. அதைத் தடுத்து நிறுத்தக் கூடியவர் நாளுக்கு நாள் அழிந்து, இழிவடைந்து கொண்டே செல்கிறார். அதை எதிர்க்கக் கூடியவர்கள், பொய்ப்படுத்தக் கூடியவர்கள் இறுதியில் மிகவும் பரிதாபத்துடன் இறந்து விடுகின்றனர்.

எந்த இயக்கத்தை இறைவன் ஆரம்பிக்கிறானோ, எதை அவன் அதிகரிக்க விரும்புகின்றானோ அதை யாராலும் தடுக்க இயலாது. ஏனென்றால், அவர்களுடைய முயற்சிகளினால் அந்த இயக்கம் நின்று விட்டால், தடுத்து நிறுத்தக் கூடியவர் இறைவனை மிகைத்து விட்டார் என்று ஒப்புக்கொள்ள நேரிடும். ஆனால், இறைவனை யாராலும் மிகைக்க இயலாது.”

ஆகவே, அன்னாருடைய இவ்விஷயங்கள் நிறைவேறும் காட்சியை நாம் ஒவ்வொரு நாளும் காண்கிறோம். எதிரி தனிப்பட்ட ரீதியிலும் முயற்சி

செய்தான்; கட்டுக்கோப்பான ரீதியிலும் முயற்சி செய்தான். ஆனால், “நான் உமது தப்லீகை பூமியின் எல்லை வரை கொண்டு சேர்ப்பேன்” என்றும் “உம்முடைய கலப்பற்ற, விருப்பமான அன்பர்களின் கூட்டத்தை அதிகரிப்பேன்” என்றும் அன்னாரிடம் அல்லாஹ் செய்த வாக்குறுதிக்கேற்ப உலகில் ஜமாஅத் பரவுவதை நாம் கண்டு வருகிறோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தைத் தம்மால் ஊதி அழித்து விட முடியும் என இந்தப் பெயர் தாங்கிய ஆலிம்களும், எதிரிகளும் நினைக்கிறார்கள். ஆனால், அவர்கள் அல்லாஹ்வை எதிர்ப்பதை அறியாமல் உள்ளனர். அல்லாஹ்வுக்கு எதிராக நிற்கும் போது அங்கு தம்முடைய அழிவைத்தான் காண நேரும்! அல்லாஹ் தன்னுடைய அடியார்களுக்கு உதவி, ஒத்தாசை செய்கின்றான்.

அல்லாஹ்வுடைய உதவி ஒத்தாசையின் காட்சிகளை உலகில் வெகு தூரத்தில் உள்ள நாடுகளிலும் நாம் காண்கிறோம். எவ்வாறான பகுதிகளில் என்றால், சில சமயம் பொதுவாக மனிதன் அங்கு சென்றடைய முடிவதில்லை. மிக கடினமான பாதைகளாக இருக்கின்றன. ஆனால், அங்கும் அல்லாஹ் தனது உதவியின் காட்சிகளைக் காட்டிக் கொண்டிருக்கின்றான். எதிரிகள் தம் சார்பாக முழுமையான முறையில் முயற்சிகளை செய்கின்றனர். ஆனால், தோல்வியைத் தான் காண்கின்றனர். சில இடங்களில் உயிர் சேதத்தையும், பொருள் சேதத்தையும் ஏற்படுத்திவிட்டு, ஜமாஅத் மக்களை அச்சுறுத்த விரும்புகின்றனர். ஆனால் இவ்விஷயங்கள் ஜமாஅத் மக்களுடைய ஈமானை அதிகரிக்கச் செய்கின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அல்லாஹ் செய்த வாக்குறுதிக்கேற்ப உலகெங்கிலும் அல்லாஹ்வுடைய உதவிகளின் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவை எவ்வாறு நிறைவேறுகின்றன என்பதை வரையறுப்பது சாத்தியமற்றதாகும். ஆனால், தற்போது ஜமாஅத்தின் முன்னேற்றங்கள் குறித்து சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்திற்குள் வாருங்கள் என்றும், அன்னாரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும், மக்களுடைய உள்ளங்களில் எவ்வாறு அல்லாஹ் விஷயங்களை இடுகிறான் என்பதைக் குறித்து எடுத்துக் கூறுவேன்.

சிலர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் தான்! ஆனால், குறைவான அறிவின் காரணமாக இந்த எதிர்ப்பு இருக்கின்றது. ஆனால், அவர்களுக்கு உண்மை தெரிய வரும்போது எதிர்ப்பை விட்டு விடுவது மட்டுமின்றி (உண்மையை) ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றனர். உதாரணமாக, இவ்வாறான ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தவாறு காங்கோ கின்ஷாஸா உடைய ஜமாஅத் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்:

அங்குள்ள ஒரு கிராமத்தில் நம்முடைய முஅல்லிம் சாஹிப் உள்ளூர் இமாமுக்கு தப்லீக் செய்யும் போது ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பாக கலந்துரையாடல் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஈஸா (அலை)

அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற கொள்கையினால் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவமரியாதை ஏற்படுகிறது என்ற விஷயத்தை அந்த அஹ்மதியல்லாத இமாம் புரிந்து கொண்ட போது உடனே உண்மையை ஏற்றுக் கொண்டார். பிறகு, இமாம் மஹ்தியினுடைய தோற்றம் குறித்த விவகாரத்தையும் அவர் புரிந்து கொண்டார். ஆகவே, அவர் தனது குடும்பத்தைச் சார்ந்த ஆறு நபர்களுடனும், தம்மை பின்பற்றக்கூடிய **21** நபர்களுடனும் பைஅத் செய்துவிட்டார்.

சில இடங்களில் ஏற்றுக் கொள்வதற்காக அல்லாஹ்வே நிலத்தை ஆயத்தம் செய்கின்றான். உதாரணமாக, கினிகனாக்ரி உடைய முபல்லிக் எழுதுகிறார்: ஒரு கிராமத்திற்கு தப்லீக் செய்தோம். அப்போது, கிராமத்தின் மிகப்பெரிய சான்றோராக இருந்த ஒருவர் கூறினார்: நான் என் பாட்டனாரிடமிருந்து மஹ்தி என்ற பெயரை அதிகமாகக் கேட்டுள்ளேன். ஆனால், அதன் விபரம் எனக்குத் தெரியாது. ஆனால், இன்று தாங்கள் அதன் விளக்கத்தை எடுத்துக் கூறினீர்கள். ஆகவே, நான் அஹ்மதியத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். பிறகு அவர் அந்த ஊர் மக்களிடம், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தினார். அதன் காரணமாக, இமாமுடன் சேர்த்து பல பேர் பைஅத் செய்தார்கள்.

பிறகு, கேம்பியாவுடைய முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகிறார்கள்: அங்குள்ள ஒரு கிராமத்திற்கு நம்முடைய தப்லீக் குழு சென்றது. அவர்களுக்கு மற்ற விஷயங்களுடன் பைஅத்துடைய **10** நிபந்தனைகளும் வாசித்துக் காட்டப்பட்டன. பைஅத்தின் இந்த **10** நிபந்தனைகளை செவியுற்ற அந்த கிராமத்தின் புரியும் திறன் கொண்ட மக்களுக்கு, இது உண்மையான இஸ்லாத்தின் விஷயங்களாயிற்றே என்று புரிந்து விட்டது. இஸ்லாத்தினுடைய இத்தகைய அழகிய போதனையை நாங்கள் முதன்முறையாக கேட்டுள்ளோம் என்று அவர்கள் ஒப்புக் கொண்டனர். ஆகவே, ஒரு நீண்ட கேள்வி பதில் அமர்வுக்குப் பிறகு, ஏறக்குறைய **200** பேர் பைஅத் செய்து அஹ்மதியத்தில் இணைந்து விட்டனர்.

ஆப்பிரிக்கா உடைய ஒரு நாட்டில் நமது முரப்பி சாஹிபை சிலர் தொடர்பு கொண்டு, நீங்கள் எங்கள் பகுதியில் தப்லீக் செய்யுங்கள். ஏனென்றால், நீங்கள் குழந்தைகளுக்குத் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்வதாக நாங்கள் அறிந்தோம் என்று கூறினார்கள்.

ஆகவே, அடுத்த நாள் நம்முடைய குழு அங்கு சென்றடைந்தது. ஒரு நீண்ட தப்லீக் அமர்வுக்குப் பிறகு பெரும் எண்ணிக்கையில் மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டனர். அதன் பிறகு, கிராமவாசிகள் அந்த கிராமத்தில் இருந்த அனைத்துப் பிள்ளைகளையும் ஒன்று சேர்த்து எங்களுக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினர். இன்றிலிருந்து இவர்கள் ஜமாஅத்தினுடைய பிள்ளைகள் ஆவர். இவர்களுக்குத் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவே, நமது முரப்பி சாஹிப் அவர்களிலிருந்து இரு சிறுவர்களைத்

தேர்ந்தெடுத்த பிறகு, அந்த இருவருக்கும் திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்கப்படும்; பிறகு, அந்த இருவரும் திரும்பிச் சென்று தம் பகுதியில் திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பார்கள் என்று கூறினார்.

பாகிஸ்தானிலோ நாம் திருக்குர்ஆன் ஓதுவது ஒருபுறம் இருக்கட்டும்! திருக்குர்ஆன் ஓதுவதைக் கேட்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. திருக்குர்ஆன் திலாவத்தைக் கேட்டதற்காக ஓர் அஹ்மதி மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆக, இதுதான் அந்தப் பெயர் தாங்கிய முஸ்லிம்களின் இஸ்லாம் ஆகும். இன்னொரு பக்கம், மக்கள் தம் பிள்ளைகளை ஜமாஅத்திடம் ஒப்படைத்து அவர்களுக்குத் திருக்குர்ஆன் கற்றுத் தாருங்கள்; ஏனென்றால் திருக்குர்ஆனுடைய சரியான அறிவு ஜமாஅத்திடம்தான் உள்ளது என்று கூறுகிறார்கள்.

ஆப்பிரிக்காவில் சாட் **(chad)** எனும் ஒரு நாட்டின் தலைநகரில் நம்முடைய முதல் பள்ளிவாசல் கட்டப்பட்டது. அப்போது பொறாமையாளர்கள் கடுமையாக எதிர்க்க ஆரம்பித்து விட்டனர். ஜமாஅத்திற்கு எதிராக அங்குள்ள இஸ்லாமிக் கவுன்சிலில் புகார் அளித்துள்ளனர். அதற்கு, இஸ்லாமிக் கவுன்சிலைச் சார்ந்தவர்கள், இறைவனை வணங்குவது அஹ்மதிகளுடைய உரிமை ஆகும். நாங்கள் அவர்களுடைய பள்ளிவாசலை எவ்வாறு மூடுவது என்று கேட்டுள்ளனர்.

அங்குள்ள இஸ்லாமிக் கவுன்சிலுக்கு குறைந்தபட்சம் இந்த அறிவாவது உள்ளதே! அவர்கள் நீதியை விரும்பக் கூடியவர்களாக உள்ளார்கள். பாகிஸ்தானிலோ நீதிபதிகளும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக பகைமை வைத்துள்ளனர். அங்கு அஹ்மதிகள் தம் பள்ளிவாசல்களில் இறை வணக்கம் செய்வதற்கும், தம் வணக்கஸ்தலங்களைப் பள்ளிவாசல் என்று கூறுவதற்கும் சுதந்திரம் இல்லை.

எவ்வாறு இருப்பினும், இஸ்லாமிக் கவுன்சில் அந்த பொறாமையாளர்களிடம், ஏதேனும் குழப்பம் பற்றி உங்களுக்கு அச்சம் இருக்கும் என்றால், நீங்கள் போலீஸிடம் சென்று அறிக்கை கொடுங்கள் என்று கூறினார்கள். போலீஸிடம் அறிக்கை கொடுக்கப்பட்ட போது, அதைக் குறித்து போலீஸ் முழுமையாக ஆராய்ந்துள்ளது. பள்ளிவாசல் கட்டுவதற்கான அனுமதி பத்திரங்களையும் ஜமாஅத்துடைய ரிஜிஸ்ட்ரேஷன் பேப்பர்களையும் சரிபார்த்துள்ளனர்; அந்தப் பகுதியின் தலைவரிடம் விபரங்களைக் கேட்டுள்ளனர்; பள்ளிவாசலுக்கு வந்து பார்த்துள்ளனர். அஹ்மதிய்யா ஜமாஅத் புதிய மார்க்கத்தை ஒன்றும் கொண்டு வரவில்லை; அதேபோன்று, நவூதுபில்லாஹ்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் இவர்கள் அவமதிப்பவர்கள் கிடையாது என்ற தீர்மானத்துக்கு போலீஸ் வந்து விட்டது.

எவருக்கு அல்லாஹ் வழிகாட்ட விரும்புகின்றானோ அவருக்கு வழி காட்டுவதற்கான ஏற்பாட்டையும் வினோதமான வழிமுறையின் மூலமாக அவன் செய்கின்றான். சவோதோமே **(Sao Tome)** என்பது ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு பகுதியாகும். அங்குள்ள முபல்லிக் இன்சார்ஜ் எழுதுகிறார்கள்: ஒரு சுற்றுலா பயணி மராக்கஷ் -லிருந்து சவோதோமேவுக்கு வந்தார். அவர்

தற்செயலாக நம் பள்ளிவாசலில் ஜுமுஆ தொழுகையைத் தொழுதார். அதற்குப் பிறகு அவர் 'சிர்ருல் கிலாஃபா' மற்றும் 'மஸ்ஹப் கே நாம் பர் கூன்' ஆகிய நூல்களை அரபி மொழியில் படித்தார். MTA அல்அரபியாவில் சில நிகழ்ச்சிகளைப் பார்த்தார். உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் மறுஒளிபரப்பையும் பார்த்தார். பிறகு அவர் கொஞ்சம் காலத்திற்குப் பிறகு மறுபடியும் வந்து, பைஅத் படிவம் கேட்டார். உடனே பைஅத் படிவத்தை நிரப்பிக் கொடுத்தார்.

அதற்கு நான் அவரிடம், இவ்வளவு விரைவு காட்ட வேண்டாம்; கொஞ்சம் காலம் துஆ செய்யுங்கள்; பிறகு முடிவெடுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர், நான் இரவு முழுவதும் துஆ செய்து கொண்டிருந்தேன். எனது உள்ளம் திருப்தி கொண்டு விட்டது. இமாமிடம் பைஅத் செய்யாமல் நான் இறந்து போனால், எனது மரணம் இமாமை ஏற்றுக்கொள்ளாத அறிவீனமான மரணமாக ஆகிவிடுமே என்று கூறினார். ஆகவே, அவர் உடனடியாக பைஅத் செய்து விட்டார்.

மராக்கஷில் அஹ்மதிகள் உள்ளனர். ஜமாஅத்துகளும் உள்ளன. ஆனால் அந்த நபருக்கு அங்கு ஜமாஅத்தின் அறிமுகம் கிடைக்கவில்லை. அல்லாஹ் ஆப்பிரிக்காவுடைய இன்னொரு நாட்டுக்கு அவரை அனுப்புகிறான். மிக தொலைதூரத்தில் உள்ள பகுதிக்குச் சென்ற பிறகு அங்கு அவருக்கு நேர்வழிக்கான ஏற்பாட்டை அவன் உருவாக்குகிறான்.

சென்ட்ரல் ஆப்பிரிக்காவில் ஒரு நபர் ஜமாஅத்தைப் பற்றி ஆராய்ந்த பிறகு பைஅத் படிவத்தை நிரப்பியபோது அவருடைய கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. அழுவதற்கான காரணம் கேட்கப்பட்டபோது, நான் ஜமாஅத்தின் எதிரிகளிடமிருந்தும் ஜமாஅத்தைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், இந்த பைஅத் படிவத்தின் 10 நிபந்தனைகளைப் படித்த பிறகு, நான் ஜமாஅத்தைப் பற்றி என்ன புரிந்து கொண்டிருந்தேன்; உங்களுடைய போதனை எவ்வாறு உள்ளது! என்று நினைக்கும் போது என்னுடைய கடந்த கால வாழ்க்கையை எண்ணி அருவெறுப்பு ஏற்படுகிறது. இந்த பைஅத் படிவத்தைப் படித்த பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத் ஓர் உண்மையான தூய ஜமாஅத்தாகும் என்பதை நான் தெரிந்து கொண்டேன் என்று கூறினார்.

*ஹுஸூர் அவர்கள் ஐவரிகோஸ்ட், பெலீஸ், உஸ்பெகிஸ்தான், கயானா போன்ற நாடுகளில், (மக்கள்) அஹ்மதிய்யா ஜமாஅத்தை ஏற்றுக்கொண்ட ஈமானுக்கு வலுவூட்டும் பல சம்பவங்களை எடுத்துக் கூறிய பிறகு, கூறினார்கள்:*

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றியது குறித்து சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறினேன். இவ்வாறு பல சம்பவங்கள் உள்ளன. எதிரிகள் தம் அதிகபட்ச முயற்சியையும் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், இன்னொரு புறம் உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அல்லாஹ் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்குப் புதிய வழிகளைத் திறந்து கொடுக்கின்றான்.

ஆகவே, இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்ற அதே வேளையில் நம் நிலைகளையும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். தமது ஈமானையும் உறுதிப்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்டு வர வேண்டும். சோதனைகள் வரும். ஆனால், இறுதி வெற்றி அல்லாஹ்வால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஜமாஅத்துக்குத்தான் கிடைக்கும். ஆகவே, ஒருபோதும் தமது ஈமானை தடுமாற்றம் அடைய விட வேண்டாம் என்று இவ்விஷயத்தை தம் சந்ததிகளிடத்திலும் உறுதியாக பதிய வைக்க வேண்டும்.

புதிதாக வரக்கூடியவர்களுக்கும், பழைய அஹ்மதிகளுக்கும் அல்லாஹ் உறுதித் தன்மையை வழங்குவானாக! ஈமானிலும் நம்பிக்கையிலும் முன்னேறச் செய்வானாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், நான்கு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

முதல் குறிப்பு, சியால்கோட்டைச் சார்ந்த மர்ஹூம் குலாம் காதிர் சாஹிப் அவர்களின் மனைவியாகிய **பர்வீன் அக்தர் சாஹிபா** அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் இவர் 90 வயதில் மரணமடைந்தார். இவருக்கு ஆரிஃப் மஹ்மூது சாஹிப் என்ற ஒரு மகன் பெனினில் முபல்லிக் ஆக உள்ளார். செயல் களத்தில் இருந்ததன் காரணமாக அவரால் தன் தாயாருடைய ஜனாஸாவில் கலந்து கொள்ள இயலவில்லை.

இரண்டாவது குறிப்பு, சௌத்ரி வஸீம் அஹமது நாசிர் சாஹிப் மர்ஹூம் கட்டியாலியா(ன்) அவர்களுடைய மனைவியாகிய **மும்தாஸ் வஸீம் சாஹிபா** அவர்களுடையதாகும். இவர்களின் இரு மகன்கள் வக்ஃப் (வாழ்வை அர்ப்பணித்தவர்கள்) ஆவார்கள். ஒரு மகன் ஸேம்பியாவில் முபல்லிக் ஆக உள்ளார்.

மூன்றாவது நற்குறிப்பு, **பிரிகேடியர் (Brigadier) முனவ்வர் அஹ்மத் ராணா சாஹிப்** அவர்களைப் பற்றியதாகும். இவர் ராவல்பிண்டி மாவட்டத்தில் ஜமாஅத்துடைய ஜெனரல் செகரட்டரியாக இருந்தார்.

நான்காவது நற்குறிப்பு, குரூப் கேப்டனாக இருந்து பணி ஓய்வு பெற்ற **அப்துஷ் ஷகூர் மலிக் சாஹிப்** அவர்களைப் பற்றியதாகும். இவர் ராவல்பிண்டியில் துணை அமீராக தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றார்.

மர்ஹூம்களுடன் அல்லாஹ் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ

اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ

وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)